கள். அது மிகவும் கடினமான காரியம், பிற்பட்ட வகுப்பு என்று வைத்துக் கொண்டிருக்கிறோம், அதற்கு அடையாளம் காண்பதற்கு ஜாதிப்பெயர் இருக்கவேண்டும். இங்கே ஜாதியை அகற்ற வேண்டுமென்று சொல்கிறார்கள், முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. ஆகவே, இதுபற்றிப் பேச வேண்டாம் என்று மாநிலங்கள் அவையில் அறிவுரை வழங்கப்பட்டது. அதைத் தான் சொன்னேன். பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் கேட்டவை பற்றி, தனிக் கேள்வி போட்டால் நாம் அதுபற்றி பேசலாம்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசாங்கத்தில் மிக முக்கிய பெரிய பொறுப்பில் உள்ளவர்கள் ரிடையர் ஆன பின்னால் ஒரு ஜாதி சங்கத்தினுடைய தலைவராக இருக்கிறார்கள். ஆக, அவர்கள் அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருக்கும்போதும் அந்த ஜாதி சார்பாக நடந்து கொள்வதற்கு அது காரணமாக இருக்கிறது. ஆகவே, அரசாங்கத்தில் உத்தியோகத்தில் பொறுப்பில் இருப்பவர்களோ அல்லது ரிடையர் ஆன பின்னாலோ ஜாதி சங்கத்தின் நிர்வாகத்தில் இருக்கக்கூடாது என்று தடையை நம்முடைய அரசு பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்குக் குறிப்பிட்டு அந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பற்றி குறிப்பு கொடுத்தால், அது பற்றி அரசு ஆய்ந்து நடவடிக்கை எடுக்கும்.

விளாத்திக்குளம் தொகுதியில் பால்பண்ணை அமைத்தல்

96—(*வினா எண். 7849)—**திரு. ச. குமர குருபரராமநாதன் :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதியில் பால்பண்ணை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதியில் பால பண்ணை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை. மேலும், இங்கு அமைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1987 மார்ச் 6]

திரு. ச. குமரகுருபர ராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி. அந்தப் பகுதியிலே விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு வேளாண்மை மக்கள் வாழ்கிறார்கள். விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலே, அந்தப் பகுதியிலே சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்கள் வளர்ச்சியடையாத காரணத்தால், தற்போது விவசாயத்திற்கு உதவுகிற பால் பண்ணை தொழிலை அபிவிருத்தி செய்தால் அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் வாய்ப்பாக இருக்கும். எனவே, பால்பண்ணை சம்பந்தப்பட்ட பிரிவை துவக்க அமைச்சர் உரிய நடவடிக்கைகள் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதியில் மொத்தம் 60 பால் உற்பத்தியாளர் சங்கங்கள் உள்ளன. இவற்றில் 27 சங்கங்களே செயல்படுகின்றன. ஆகவே, எல்லா சங்கங்களும் செயல்பட ஆரம்பித்த பிறகு இதுபற்றி நாம் யோசிக்கலாம்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலாவது அல்லது சிதம்பரனார் மாவட்டத்திலாவது பால் உற்பத்தி மற்றும் பால் பதப்படுத்துவதை விரிவுபடுத்துவதற்கு அபிவிருத்தி திட்டம் ஏதாவது அரசின் ஆய்வில் இருக்கிறதா? அப்படியிருக்குமானால் எப்பொழுது அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் நெல்லை மாவட்டம், வ.உ.சி. மாவட்டம் இரண்டுக்கும் சேர்ந்தார்போல் அண்மையில் ரூ. 7.5 கோடி செலவில் பால் பதனிடுதல், பால் உற்பத்தி பெருக்கம், பால் விற்பனை ஆகியவற்றிற்கு ஒரு திட்டம் அனுமதிக்காக வந்திருக்கிறது.

தமிழ்நாடு பால்வள நிறுவனம்

97—(*வினா எண். 9600)—திருமதி. தா. ராசாம்பாள்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பால்வள நிறுவனம் கடந்த ஐந்து ஆண்டுகளில் நடத்திய விற்பனையின் அளவைக் காட்டிலும் கொள்முதல் அளவு அதிகம் என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், உபரியை சத்துணவு மையங்களுக்கு விநியோகம் செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

TRUTH ALONE TRIUMPHS